ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/99 - 2016 අගෝස්තු මස 27 වැනි සෙනසුරාදා - 2016.08.27

*1981/99 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2010.09.10 ஆந் திகதிய, 1670/33 ஆம் இலக்க, 2011.03.01 ஆந் திகதிய 1695/15 ஆம் இலக்க மற்றும் 1865/36 ஆம் இலக்க 2014.06.06 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு***

*2010.09.10 ஆந் திகதிய, 1670/33 ஆம் இலக்க, 2011.03.01 ஆந் திகதிய, 1695/15 ஆம் இலக்க மற்றும் 2014.06.06 ஆந் திகதிய 1865/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பின் 1.2, 6.1, 6.2, 8.3, 10.1.1, 10.2.1.1, 10.3.1, 12(ii), 20 மற்றும் 20.1.4 உறுப்புரை மற்றும் 2 ஆவது மற்றும் 7 ஆவது பின் இணைப்பு கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.*

1.2 ***அமைச்சு :*** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
அனுப்பிய இலக்கம் : MPubAd/ AcSD/ SMA
திகதி : 2016.04.27

6.1

| அனுமதிக் கப்பட்ட பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவி அணிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| தரம் III/II<br>தரம் I<br>விசேட தசம் | 1400<br>388<br>47 | (i) தம்மிடம் குறித்து ஒப்படைக்கப்படுகின்ற விடயங்களை நிதிப் பிரமாணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து ஒழுங்கு விதிகள் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் நிறுவனத்தின் கணக்கீட்டு முறைமையை முறையாக மேற்கொள்ளல். தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்களை வெளியிடல், அதனுடன் தொடர்புடைய கணக்கீடு மற்றும் அது பற்றிய தகவல்களடங்கிய அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அவற்றினை இற்றைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லல் மற்றும் கிடைப்பனவு கொடுப்பனவு பற்றிய பணிகளை மேற்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை செயற்படுத்தல், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உதவுதல், இணைந்த நிறுவனங்களின் கணக்கு அலுவல்கள் தொடர்பாக ஒப்படைக்கப்படும் பணிகள் மற்றும் நிறுவனத்தின் கணக்கீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய பிற பணிகள். |

| அனுமதிக் கப்பட்ட பதவிகள் | அனுமதிக்கப்பட்ட பதவி அணியின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| | | (ii) வினைத்திறனாகவும், வெற்றிகரமான முறையிலும் நிதி முகாமைத்துவ முறையினை செயற்படுத்தல், நிதிசார் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும், நிதித் திட்டமிடலும் வரவு செலவு திட்டமும், கணக்கீடும் தகவல்வழங்கலும், உள்ளக கட்டுப்பாடு சொத்துக்களின் முகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் பற்றிய நிதி முகாமைத்துவ ஆலோசனைகளும் கண்காணிப்பும் நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல், நிதிப் பொறுப்புக்கள் மற்றும் நிதிசெயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு கூற வேண்டிய விடயங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவருக்கு உதவுதல், இணைந்த நிறுவனங்களின் நிதி முகாமைத்துவ வழிகாட்டல்கள், கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் நிதி முகாமைத்துவ பணியாட்தொகுதிக்கான பயிற்சி. |

*6.2* ***இணைந்த அலுவலர்களின் எண்ணிக்கை-***

| | |
|---|---|
| தரம் - III/ II | *1400* |
| தரம் - I | *388* |
| மொத்தம் - | *1788* |

ஓர் தரத்திலிருந்து மற்றொரு தரத்துக்கு பதவியுயர்த்தும் செயற்பாட்டிற்காக III/II மற்றும் I ஆம் தரத்தின் சகல இணைந்த அலுவலர்களும் உரித்துடையதாகக் கருதப்படும்".

*8.3* 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையினை நடாத்தும் அலுவலர்கள் யாவர் :
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால்

*10.1.1.1* (vii) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் மேம்பாட்டு மட்டம் - III இற்கான பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

*10.2.1.1* (vi) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் மேம்பாட்டு மட்டம் - II இற்கான பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

*10.3.1* (i) 5 ஆம் பின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள தகைமைகளில் ஒன்றையாவது அல்லது பூர்த்தி செய்திருத்தல்.

ஏனைய ii, iii, iv மற்றும் vஆம் உறுப்புரை தற்போதைய சேவைப் பிரமாணக் குறிப்பின் (1865/36 ஆம் இலக்க 2014.06.06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் திருத்தம்) நிலவும் வகையிலே காணப்படுகின்றது.

*12* (II) ***திறன் அபிவிருத்தி***

திறன் அபிவிருத்தியானது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டிய செயற்பாடாக அமைவதோடு சேவையின் பொதுவான கடமைப் பொறுப்புக்களை ஈடேற்ற அவசியமான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்தலே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த திறன் அபிவிருத்திச் செயற்பாடு சேவைத் தொடக்க நிலைப் பயிற்சி மற்றும் சேவை நிலையப் பயிற்சி என இருவிதமாக அமையும்.

அ. சேவை தொடக்க நிலைப் பயிற்சி

(i) சேவைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டட அலுவலர் ஒவ்வொருவரும் செயலாளரது அனுமதி மற்றும் ஏற்பாட்டின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அல்லதுவேறு உயர் கல்வி/பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற சேவைத் தொடக்க நிலைப் பயிற்சியுடனான அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான தொழிற் தகைமை டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தராதரப் பத்திரம் பெறல் வேண்டும். இப்பயிற்சி நியமனத் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

(ii) அலுவலர் ஒவ்வொருவரும் சிங்களம், தமிழ் ஆகிய அரச கருமமொழிகள் இரண்டிலும் தேர்ச்சி பெற சேவைத் தொடக்க நிலைப் பயிற்சி மூலமாக ஒத்துழைப்பு வழங்கப்படும். அத்துடன் சேவையின் பொதுவான கடமைப் பொறுப்பினை ஈடேற்ற ஏற்புடையதாக அமைகின்ற சமூக, பொருளாதார,அரசியல், சட்ட, கலாசார மற்றும் சர்வதேச சூழலில் ஏற்படுகின்ற அபிவிருத்திப் போக்குகள் பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும் இதனூடாக வாய்ப்பு வழங்கப்படும். சேவைத் தொடக்க நிலைப் பயிற்சியின் இறுதியில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மூலமாக டிப்ளோமா பாடநெறியின் ஒரு பகுதியாக நடாத்தப்படுகின்ற ஆங்கில மொழிப் பாடத்திற்கு 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று சித்தியடைதல் வேண்டும்.

(iii) பயிற்சிக் காலத்தில் பயிலுநர் அலுவலரொருவர், அவர் இணைக்கப்படுகின்ற பயிற்சி நிறுவனத் தலைவரின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ்ப்படுவார்.

(iv) திறந்த மற்றும் திறமையின் அடிப்படையில் நேரடியாக சேவையில் பிரவேசிக்கின்ற பயிலுநர் அலுவலரொருவர் சேவைத் தொடக்க நிலைப் பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையாவிடின் அப்பயிலுநர் அலுவலரது சேவை முடிவுறுத்தப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் சேவையில் பிரவேசிக்கின்ற பயிலுநர் அலுவலரொருவர் சேவைத் தொடக்க நிலை பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையாவிடின் மேற்படி பயிலுநர் அலுவலர் அரச சேவையில் முன்னர் வகித்த பதவிக்கு மீண்டும் அனுப்பப்படுவார்.

***(ஆ) சேவை நிலையப் பயிற்சி***

சேவை நிலையப் பயிற்சி மூலம் அலுவலரொருவருக்கு தொடர்ந்தும் தொழில்சார் அனுபவம் வழங்கப்படுகின்றது. சேவையின் நான்கு (04) தரங்களுக்கும் அளிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் அவற்றின் தொழில்சார் அபிவிருத்தி இப்பயிற்சிப் பாடநெறி, மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.சேவையின் பொருட்டு இனங்காணப்பட்ட பிரதான திறன்களை மையமாகக் கொண்டதாக இப்பயிற்சிப் பாடநெறிகள் தயாரிக்கப்படும்.

(i) *ஆற்றல் மேம்பாட்டு மட்டம் - III*
இப்பயிற்சி சேவையின் தரம் (III) மூன்றைச் சேர்ந்த அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும். செயலாளரது அனுமதியின் பேரில் இலங்கை நிர்வாக நிறுவகத்தினால் அல்லது வேறு உயர் கல்வி/பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் மேம்பாட்டு மட்டம் III பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தராதரப் பத்திரம் பெறுவதன் மூலம் இத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(ii) *ஆற்றல் மேம்பாட்டு மட்டம் - II*
இப்பயிற்சி சேவையின் தரம் (II) இரண்டைச் சேர்ந்த அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும். செயலாளரது அனுமதியின் பேரில் இலங்கை நிர்வாக நிறுவகத்தினால் அல்லது வேறு உயர் கல்வி/பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் மேம்பாட்டு மட்டம் II பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தராதரப் பத்திரம் பெறுவதன் மூலம் இத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(iii) *ஆற்றல் மேம்பாட்டு மட்டம் - I*
இப்பயிற்சி சேவையின் தரம் (I) ஒன்றைச் சேர்ந்த அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும். செயலாளரது அனுமதியின் பேரில் இலங்கை நிர்வாக நிறுவகத்தினால் அல்லது வேறு உயர் கல்வி/பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் மேம்பாட்டு மட்டம் I பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து தராதரப் பத்திரம் பெறுவதன் மூலம் இத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(iv) *கொள்கை மட்டம்*
சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் உள் அல்லது வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் பாடநெறிகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதன் மூலமாக இத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

*20.* **இடைக்காலத்தினுள் பதவியுயர்வுகள் மேற்கொள்ளல்**

இடைக்காலம் 2015.02.28 ஆந் திகதி வரை வலுவில் இருக்கும்

***20.1.4 இடைக்கால ஏற்பாடுகள்***

(i) இவ்வர்த்தமானிப் பத்திரம் பிரசுரிக்கப்பட்ட திகதியன்று இலங்கை கணக்காளர் சேவையின் I ஆந் தரத்துக்கு பதவியுயர்வு பெற்று ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள், சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள III ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியெய்தல் தேவைப்பாட்டிலிருந்து விடுபடுவர்.

(ii) இவ்வர்த்தமானிப் பத்திரம் பிரசுரிக்கப்படும் திகதியன்று ஐந்து (5) வருடங்களுக்கு முன்னைய திகதியிலிருந்து சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தம் கொண்ட வர்த்தமானிப் பத்திரம் பிரசுரிக்கப்படும் திகதி வரை இலங்கை கணக்காளர் சேவையின் I ஆந் தரத்துக்கு பதவியுயர்வு பெற்ற அலுவலர்களுக்கு III ஆம் வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக இரண்டு (2)வருடங்கள் மேலதிக சலுகைக் காலமாக பெற்றுக் கொடுக்கப்படும்.

**இரண்டாம் (02) பின்னிணைப்பு**

***2. திறமைகளின் அடிப்படையில் நேரடி ஆட்சேர்ப்பின் போது புள்ளி வழங்கப்படும் கட்டமைக்கப்பட்ட நடைமுறைகள்.***

*(அ) கல்வித் தகைமைகள் - அதிகபட்ச புள்ளி - 20*

| கல்வித் தகைமைகள் : | | புள்ளி |
|---|---|---|
| (i) | சாதாரண பட்டம் | 08 |
| (ii) | விசேட பட்டம் | 09 |
| (iii) | இரண்டாம் வகுப்புடன் கூடிய சாதாரண பட்டம் | 09 |
| (iv) | இரண்டாம் வகுப்புடன் கூடிய விசேட பட்டம் | 11 |
| (v) | முதலாம் வகுப்புடன் கூடிய சாதாரண பட்டம் | 11 |
| (vi) | முதலாம் வகுப்புடன் கூடிய விசேட பட்டம் | 12 |
| (vii) | பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி | 15 |

(அரச நிதி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகத்துறை, பொருளாதாரம், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல், தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற அதற்குரித்தான துறைகள்)

(viii) முதுமாணிப் பட்டம் — 17

(அரச நிதி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகத்துறை, பொருளாதாரம், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல், தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற அதற்குரித்தான துறைகள்)

(ix) பட்டப்பின் கற்கைநெறி அல்லது அதனிலும் மேலான பட்டம் — 20

(அரச நிதி முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகத்துறை, பொருளாதாரம், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல், தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற அதற்குரித்தான துறைகள்)

| (இ) கணினி அறிவு | | புள்ளி |
|---|---|---|
| (ii) | பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலை அல்லது தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட ஆறு (06) மாதங்கள் அல்லது அதற்கு மேலதிகமான காலத்தினுள் கணினி சான்றிதழ் பத்திர பாடநெறியினை சித்தியெய்தி சான்றிதழினைப் பெற்றிருத்தல். | 05 |

ஏனைய i, iii, iv மற்றும் v ஆம் உறுப்புரையில் தற்போது காணப்படும் சேவைப் பிரமாணக் குறிப்பில் (இலக்கம் 1865/36 மற்றும் 2014.06.06 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியில் திருத்தப்பட்ட) நிலவும் வகையில் காணப்படுகின்றது.

**7 ஆம் பின் இணைப்பு**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அல்லது வேறு உயர் கல்வி/பயிற்சி நிறுவனத்தினால் அல்லது நடாத்தப்பட்ட ஆற்றல் மேம்பாட்டு மட்டம் - 1 பாடநெறியினை வெற்றிகரமாக பூரணப்படுத்தி சான்றிதழ் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மூன்றாம் வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சையின் தேவை பூர்த்தி செய்யப்படும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

எச்.எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
அரச சேவைகள் ஆணைக்குழு.

அரச சேவைகள் ஆணைக்குழு,
கொழும்பு 05.
2016, ஆவணி 25.

9-479

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.